பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 82 நாள்: 08.06.2016

## அம்பத்தூர் மண்டலத்தில் ரூ.48.38 கோடி மதிப்பீட்டில் 13747 எண்ணிக்கையில் எல்.இ.டி தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் தீவிரம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மக்களுக்கான பல்வேறு அடிப்படை வசதிகளை சிறப்பாக செய்து வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–7 அம்பத்தூர் 2011ஆம் ஆண்டு நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில், தெருவிளக்குகள் மொத்தம் 12660 குழல் விளக்குகள் மற்றும் சோடியம் விளக்குகளாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கம்பங்களில் கட்டப்பட்டு எரிய வைக்கப்பட்டிருந்தன. சோடியம் ஆவி விளக்குகள் 4136 எண்ணிக்கையில் நகராட்சி தெருவிளக்கு கம்பங்களில் அமைக்கப்பட்டிருந்தன. ஆக மொத்தம் 16,796 எண்ணிக்கையில் நகராட்சி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. முக்கிய வீதிகளை தவிர மற்ற தெருக்களில் வெளிச்சம் மிகவும் குறைவாக காணப்பட்டதோடு பாதுகாப்பற்ற சூழலில் மக்கள் வசித்து வந்தனர். தற்போது அம்பத்தூர் மண்டலத்தில் ரூ.48.38 கோடி மதிப்பீட்டில் 13747 எண்ணிக்கையில் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2012–ம் ஆண்டு முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியின் மூலம் ஒருங்கிணைந்த சாலைப்பணிகள் என்ற திட்டத்தின் (Grid I & II) மூலம் சுமார் 1435 எண்ணிக்கையிலான சோடியம் ஆவி விளக்குகள் ரூ.302.41 லட்சம் மதிப்பீட்டிலும், 2012–2013 – KFW-I என்ற திட்டத்தின் மூலம் ரூ.353.94 லட்சம் மதிப்பீட்டில் 1289 எண்ணிக்கையிலான எல்.இ.டி. தெருவிளக்குகள் மண்டலம்–7ல் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2013–2014–ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூ.465.55 லட்சம் மதிப்பீட்டு செலவில் 1288 எண்ணிக்கையிலான எல்.இ.டி. விளக்குகளும், 2014–2015–ஆம் ஆண்டு KFW-II திட்டத்தின் கீழ் ரூ.1009.24 லட்சம் மதிப்பீட்டில் 4998 எண்ணிக்கையிலான எல்.இ.டி. விளக்குகளும், 2014–2015ஆம் ஆண்டு KFW-III திட்டத்தின் கீழ் 1271 எண்ணிக்கையிலான புதிய எல்.இ.டி. விளக்குகள் ரூ.555.80 லட்சம் மதிப்பீட்டில் 80, 81, 83 மற்றும் 86 ஆகிய வார்டுகளிலும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2013–2014, 2014–2015 ஆகிய வருடங்களில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் 20 எண்ணிக்கையிலான புதிய உயர்மின் கோபுர விளக்குகள் ரூ.96.00 லட்சம் மதிப்பீட்டில் அதிகமான மக்கள் நடமாடும் பகுதிகளில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

இதுவரை அம்பத்தூர் மண்டலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம், புதியதாக 1435 எண்ணிக்கையில் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 8846 எண்ணிக்கையிலான எல்.இ.டி. விளக்குகள் அமைக்கப்பட்டு அம்பத்தூர் மண்டலமே பிரகாசமாக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்பொழுது KFW-IV என்ற திட்டத்தின் கீழ் 4668 எண்ணிக்கையில் ரூ.2301.68 லட்சம் மதிப்பீட்டில் எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணியும், மூலதன நிதியின் கீழ் 233 எண்ணிக்கையில் ரூ.153.36 லட்சம் மதிப்பீட்டில் புதிய எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–7ஆவதற்கு முன் பழைய குழல் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகளின் மொத்த எண்ணிக்கை 12660 ஆகும். பெருநகர சென்னை மாநகராட்சி ஆன பின்பு KFW–4 பணியும் முடிந்த பிறகு புதிய பிரகாசமான எல்.இ.டி. விளக்குகளின் எண்ணிக்கை (8846+4668) 13,514 என்ற நிலையில் உள்ளது. இதில் ஏறக்குறைய மொத்த விளக்குகளின் 65% புதிய எல்.இ.டி. விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, மின்சிக்கனத்தினையும் கடைப்பிடிப்பதால் வருங்காலத்தின் மின்தேவையினை கருத்தில் கொண்டு மின் சிக்கன செலவீனமும் நடைமுறையில் உள்ளது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**